**<u>அட்டவணை</u>**


| வரிசை எண் | அறிவிப்பின் விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| | **வணிக வரிகள்** | |
| 1 | வணிகவரி துறையில் நீண்ட காலமாக தற்காலிகமாக உள்ள பணியிடங்களை நிரந்தரமாக்குதல் | |
| 2 | சென்னை வணிகவரி கோட்டங்களை மறுசீரமைத்தல் | |
| 3 | வணிகவரி துறைப் பணியாளர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கு கூடுதல் நிதி ஒதுக்கம் | |
| 4 | ஜென்செட்டுகள் மீதான வரி வீதத்தை ஜெனரேட்டர்களுக்கு இணையாக குறைத்தல். | |
| 5 | வணிகர்களுக்கான விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல் | |
| | **பதிவுத் துறை** | |
| 1 | பதிவுத் துறையில் நீண்ட காலமாக தற்காலிகமாக உள்ள பணியிடங்களை நிரந்தரமாக்குதல் | |
| 2 | சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ஜெனரேட்டர்கள் வழங்குதல் | |
| 3 | பதிவுத் துறைக்கென தனியாக சிறப்பு அரசு வழக்கறிஞரை நியமனம் செய்தல் | |
| 4 | பதிவுத் துறை பணியாளர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கு கூடுதல் நிதி ஒதுக்கம் | |

## <u>வணிகவரிகள் துறை</u>

**1. வணிகவரித் துறையில் நீண்ட காலமாக தற்காலிகமாக உள்ள பணியிடங்களை நிரந்தரமாக்குதல்**

வணிகவரித் துறையில் தற்போது சுமார் 4500க்கும் மேற்பட்ட பணியிடங்கள் பல்வேறு நிலைகளில் தற்காலிகப் பணியிடங்களாக உள்ளன. இந்தப் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆன பின்னும் நிரந்தரமாக்கப்படாமல் தொடர்ந்து பணி நீட்டிப்பு மட்டுமே ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது. சில நேரங்களில் இப்பணி நீட்டிப்பு ஆணை வெளியிடுவதில் தாமதமாகும் நேர்வுகளில் நிர்வாக சிக்கல்கள் ஏற்படுவதுடன், இப்பணியிடங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்களும் சிரமத்திற்கு உட்படுகின்றனர். இந்த இடர்ப்பாடுகளைக் களைய, **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி**, வணிகவரித் துறையில் உள்ள தற்காலிகப் பணியிடங்கள் நிரந்தரப் பணியிடங்களாக மாற்றப்படும்.

**2. சென்னை வணிகவரி கோட்டங்களை மறுசீரமைத்தல்**

வணிகவரித் துறையில், தற்போது சென்னை மண்டலத்தில், சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, மத்திய சென்னை மற்றும் சென்னை வடக்கு என நான்கு கோட்டங்கள் உள்ளன. இக்கோட்டங்களுக்கிடையேயான பணிப்பகிர்மானம் ஒரே சீராக இல்லாததால் இவற்றின் பணிப்பளுவில் அதிக அளவில் வேறுபாடு உள்ளது. எனவே, **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா**

**அவர்களின் ஆணைப்படி**, இந்த நான்கு கோட்டங்களின் ஆட்சி எல்லையை மறுசீரமைத்து, அதன் மூலம் இவற்றின் பணிகள் சீராக்கப்படும்.

**3. வணிகவரித் துறைப் பணியாளர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கு கூடுதல் நிதி ஒதுக்கம்**

வணிகவரித் துறையின் பணியாளர்களால் பல்வேறு சட்டங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. வணிகர்களின் கோரிக்கைகளை ஏற்றும் வரி செலுத்தும் நடைமுறையில் முன்னேற்றம் கொண்டு வரவும் அவ்வப்போது உரிய சட்டங்களுக்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு மேற்கொள்ளப்படும் திருத்தங்களை நடைமுறைப்படுத்தும் அலுவலர்களான வணிகவரித் துறையின் பணியாளர்களுக்கு உரிய பயிற்சி அளிக்க, **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி,** பயிற்சிக்காக ஒதுக்கப்படும் நிதியுடன், கூடுதலாக ஆண்டுதோறும் ரூ.10 இலட்சம் ஒதுக்கப்படும்.

**4. ஜென்செட்டுகள் மீதான வரிவீதத்தை ஜெனரேட்டர்களுக்கு இணையாக குறைத்தல்.**

**மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவிப்பிற்கிணங்க,** 7.12.2012 முதல் ஜென்செட்டுகள் மீதான வரிவீதம் 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1.4.2008 முதல் ஜெனரேட்டர்கள் மீதான வரியானது 4 சதவிகிதமாக 11.07.2011 வரையும், அதன் பிறகு 5 சதவிகிதமாகவும், குறைந்த

வரிவீதத்தில் வரிவிதிப்புக்குட்பட்டு வருகிறது. இந்த இடைப்பட்ட காலத்தில் **(1.4.2008** முதல் **6.12.2012** வரை) ஜெனரேட்டர் மற்றும் ஜென்செட்டுகள் மீதான வரிவீதங்களில் உள்ள வேறுபாட்டைக் களைய, **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி**, ஜென்செட்டுகளின் மீதான வரிவீதமும் 1.4.2008 முதல் முன்தேதியிட்டு ஜெனரேட்டர்களுக்கு இணையாக குறைக்கப்படும்.

## 5. வணிகர்களுக்கான விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்

வரி செலுத்துவதற்கான முறைகளை எளிமைப்படுத்த அவ்வப்போது நடைமுறை மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், வரிவிதிப்பு தொடர்பான சட்டங்களில் தேவைக்கேற்ப அவ்வப்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு அறிமுகப்படுத்தப்படும் புதிய நடைமுறைகள் மற்றும் செய்யப்படும் சட்டத்திருத்தங்கள் ஆகியவற்றில் வணிகர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்திடவும், தெளிவுபடுத்திடவும், **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி**, 2013–2014–ஆம் ஆண்டு முதல் வணிகர்களுக்கான விழிப்புணர்வு முகாம்கள் நடத்திட, ஆண்டுதோறும் ரூ.20 இலட்சம் ஒதுக்கப்படும். இத்தகைய விழிப்புணர்வு முகாம்கள் அனைத்து வணிக வரி மண்டலங்களிலும் நடத்தப்படும்.

## பதிவுத் துறை

### 1. பதிவுத் துறையில் நீண்ட காலமாக தற்காலிகமாக உள்ள பணியிடங்களை நிரந்தரமாக்குதல்

பதிவுத் துறையில் தற்போது சுமார் 1700க்கும் மேற்பட்ட பணியிடங்கள் பல்வேறு நிலைகளில் தற்காலிகப் பணியிடங்களாக உள்ளன. வணிக வரித் துறையிலுள்ளது போன்றே பதிவுத் துறையிலும் இந்தப் பணியிடங்கள் நிரந்தரமாக்கப்படாமல் தொடர்ந்து பணி நீட்டிப்பு வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, இதனால் ஏற்படும் நிர்வாக சிக்கல்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஏற்படும் சிரமம் ஆகியவற்றைக் களைய, **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி**, பதிவு துறையில் உள்ள தற்காலிகப் பணியிடங்கள் நிரந்தரப் பணியிடங்களாக மாற்றப்படும்.

### 2. சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ஜெனரேட்டர்கள் வழங்குதல்

அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றின் பணிகள் பாதிக்கப்படாமல் இருக்க, கடந்த ஆண்டு 150 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ஜெனரேட்டர்கள் வழங்க ஆணையிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி**, நடப்பாண்டிலும் சென்னையைத் தவிர பிற இடங்களில் அதிக ஆவணப் பதிவு நடைபெறும் 150 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ஜெனரேட்டர்கள் வழங்கப்படும்.

**3. பதிவுத் துறைக்கென தனியாக சிறப்பு அரசு வழக்கறிஞரை நியமனம் செய்தல்**

பதிவுத் துறை தொடர்பாக அதிக வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்திலும் அதன் மதுரை கிளையிலும் நிலுவையாக உள்ளன. இவ்வழக்குகள் அரசின் வருவாய் குறித்ததாக இருப்பதால், இவற்றின் மீது தனிக்கவனம் செலுத்தி வாதிட வேண்டியது அவசியமாகின்றது. எனவே, **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி**, பதிவுத் துறை தொடர்பான வழக்குகளில் வாதிடுவதற்காக தனியாக சிறப்பு அரசு வழக்கறிஞர் ஒருவரும், அவருக்கு உதவியாக சென்னை உயர் நீதிமன்றத்தில் இரண்டு அரசு வழக்கறிஞர்களும், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் ஒரு அரசு வழக்கறிஞரும் நியமனம் செய்யப்படுவர்.

**4. பதிவுத் துறை பணியாளர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கு கூடுதல் நிதி ஒதுக்கம்**

பதிவுத் துறையின் பணியாளர்களுக்கு துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் குறித்து பயிற்சி வழங்குவதற்காக சென்னையில் பதிவுத் துறைப் பயிற்சி மையம் இயங்கி வருகின்றது. 2012–2013–ஆம் ஆண்டில் இந்த பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் பணியாளர்களுக்காக ரூ.49 இலட்சம் செலவில் தங்கும் விடுதி கட்ட ஆணையிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2013–2014–ஆம் ஆண்டில் இந்த பயிற்சி மையத்திற்கு

தேவையான கணினி மற்றும் தொடர்புடைய உபகரணங்கள் வாங்க ரூ.9.70 இலட்சம் ஒதுக்கப்பட உள்ளது. இப்பயிற்சி மையத்தில் வழங்கப்படும் பயிற்சியை மேலும் செம்மைப்படுத்த, **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி**, பயிற்சிக்காக ஒதுக்கப்படும் நிதியுடன், கூடுதலாக ஆண்டுதோறும் ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.